

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் 7வது முறையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர். அர.சக்கரபாணிக்கு நிர்வாகிகள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.





தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் தென்காசி கிழக்கு ஒன்றியம் குத்துக்கல்வலசை ஊராட்சியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னாள் மாவட்டச் செயலாளர் சிவபத்மநாதன், ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவனை ஆரத்தியுடன் பெண்கள் வரவேற்றனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

சிவகங்கை, மே 19–

சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன்வரவேற்றுப் பேசினார் . கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. திருமதி தமிழரசி ரவிக்குமார், மாநில கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் மருது அழகுராஜ், காரைக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் நல்ல சேதுபதி ஆகியோர் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:–

கழகம் தோன்றியநாளிலிருந்து வெற்றி தோல்விகளை சந்தித்துள்ளது. தோல்வியிலிருந்து கழகம் மீண்டுள்ளது. இத்தேர்தலில் ஒன்றும் நமக்கு ஏற்பட்டதோல்வி பெரிய தோல்வி கிடையாது. எதிர்பாராமல் ஏற்பட்ட தோல்வியாகும் . இந்த தோல்வியினால் கழகத் தோழர்கள் யாரும் துவண்டு விட வேண்டாம் என்று நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எளிதில் நாம் இந்த தோல்வியை கடந்து விடலாம். அதற்கு ஏற்ப நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கழகப் பணியாற்றிட வேண்டும். வருகிற ஜூன் மாதம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பாக மாவட்டத்தில் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும். கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் ஐந்தாண்டுகள் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை நாம் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் .தோல்வி குறித்து ஆராய கழகத் தலைவரால் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் நமது மாவட்டத்திற்கு வரும்பொழுது நம்முடைய நான்கு தொகுதிகளிலும் தோல்விக்கான காரணங்களை அவர்களிடம் நேரடியாக தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார் .

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1.வருகிற ஜூன் மாதம் முன்னாள் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக மாவட்ட அளவில் ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சி அளவில் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

2.சட்டமன்றத்தில் கழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ஆக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சிறப்பாக சட்டமன்ற பணி ஆற்றிடவும் மக்கள் பிரச்சனைகளை சட்டமன்றத்தில் எடுத்துரைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கலந்து கொண்டார்கள்.

முடிவில் காரைக்குடி மாநகர செயலாளர் நா.குணசேகரன் நன்றி கூறினார்.

### மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை!

# நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.சிறப்புரை!

நெல்லை,மே.19-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 17.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று நெல்லை மேற்கு மாவட்ட அலுவலகம், கலைஞர் அரங்கத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், ப.தமயந்தி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் வி.இராமச்சந்திரன், மா.கணேசன், கா.அபூபக்கர், இரா.ரவிச்சந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் அம்பாசமுத்திரம் கிழக்கு சிவனுபாண்டியன் (எ) பரணிசேகர், மேற்கு பா.ஜெகன், சேரன்மகாதேவி கிழக்கு முத்துபாண்டி (எ) பிரபு, மேற்கு முத்து கிருஷ்ணன், ஆலங்குளம் கிழக்கு மு.செல்லத்துரை, தெற்கு, சிவக்குமார்,மேற்கு சமுத்திர பாண்டியன், கீழப்பாவூர் கிழக்கு சிவன்பாண்டியன்,வடக்கு பொன்செல்வன், கடையம் மேற்கு ஜெயக்குமார், கிழக்கு இரா. குமார், பாப்பாக்குடி வி.ஏ. மாரிவண்ணமுத்து, நகரக் கழகச் செயலாளர் விக்கிரமசிங்கபுரம் கி.கணேசன், பேரூர் கழக செயலாளர்கள்

முத்துகணேசன், இசக்கி பாண்டியன், சுப்பையா, மணிஷா செல்வராஜ், மணிகண்டன், வானுவாமலை, அழகேசன், லஷ்சுமணன், நெல்சன், ஜெகதீசன், மாவட்ட அணி அமைப்பாளர்கள், வழக்கறிஞரணி ஜெ.செல்வசூடாமணி, இலக்கிய அணி நெல்லை மணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி சு.க.நெடுஞ்செழியன், தகவல் தொழில்நுட்ப அணி எஸ்.பிரேம் ஆனந்த், மருத்துவர் அணி தி.கார்த்திக் குமார், அயலக அணி பீர்முகம்மது, பொறியாளர் அணி அருணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், ஆகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மகளிர், முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும், மாணவ, மாணவியர், இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங்களை தந்து நடத்தி வந்த டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் ஜூன் 3ஆம் தேதி ஆகும். கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும். நெல்லை மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர, பேரூர்,கிளை,வார்டு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும், இனிப்புகள் வழங்கியும் ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மகளிர், முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும், மாணவ, மாணவியர், இளைஞர்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்டங்கள் வழங்கி, பிறந்த நாள் நிகழ்ச்சிகளை நடத்தியும் அதனைத் தொடர்ந்து ஜூன் மாதம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்டங்கள் வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் சார்பில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்திட வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஊரக, நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகதோழர்கள் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மிகச்சிறப்பாக, மிகுந்த எழுச்சியோடும் கொண்டாட வேண்டும்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கான தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து, அனல் பறக்கும் பிரச்சாரங்கள் செய்தும்,பல இலட்சம் வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் சேகரித்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தி.மு.க கழகத் தலைவருமான தளபதியார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறது.

திருநெல்வேலி மண்டல பொறுப்பாளராக கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்டு,கொடுக்கப்பட்ட 22 சட்டமன்ற தொகுதிகளுக்கு சென்று கழக நிர்வாகிகளை சந்தித்து, தேர்தல் பணிகளை துரிதப்படுத்தி ஆலோசனைகள் வழங்கி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் 13 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய கழக துணை பொதுச்செயலாளரும்,மண்டல பொறுப்பாளரும்,தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும்,பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

இளைஞர்களின் எழுச்சி நாயகர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு சட்டமன்றத்தின் சட்டமன்ற குழுத்தலைவராகவும்,சட்டமன்ற எதிர்கட்சித் தலைவராக தேர்தெடுத்த கழகத்தலைவர் அன்புத் தளபதியார், அவர்களுக்கும் கழக சட்டமன்ற உருப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

சட்டமன்ற பொதுத் தேர்தலில் திருநெல்வேலி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் பி.ஹெச். பி.மனோஜ் பாண்டியன் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார். அவரது வெற்றிக்கு பாடுபட்ட கழகத்தோழர்கள் அனைவருக்கும் வாக்களித்த வாக்காள பெருமக்களும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது. அதுபோன்று அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்குகள் சேகரிக்க உழைத்த கழக நிர்வாகி களுக்கும், கழகத்தோழர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

**எதிர்க்கட்சித் தலைவருக்கு பாராட்டு!**

நடந்து முடிந்த 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிக்கு சுமார் 1,58,00000/ (ஒரு கோடியே ஐம்பத்திதெட்டு இலட்சம்)க்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.வாக்களித்த வாக்காள பெருங்குடி மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அம்பாசமுத்திரம்,ஆலங்குளம் சட்டமன்றத்தில் கழக வேட்பாளர் மற்றும் கூட்டணிக்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக அல்லும் பகலும்,கண் துஞ்சாது,அயராது உழைத்த கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள்,கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் நன்றியையும்,பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் தலைமையில் 14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்தத்திற்கிணங்க நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து 'கள ஆய்வு' செய்வதற்காக 36 பேர் கொண்ட அமைக்கப்பட்ட குழுவில் திருநெல்வேலி மேற்கு மாவட்டத்திற்கு சுபா.சந்திரசேகர், டாக்டர்.யாழினி ஆகியோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கள ஆய்வின்போது மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள தொகுதி பார்வையாளர்கள், வேட்பாளர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆகியோரை தனித்தனியாக சந்தித்து பேசவுள்ளனர். மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்படும் கள ஆய்வு தேதியில் மேற்கண்ட அனைவரும் தவறாது வருகை தந்து ஆய்வில் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒன்றிய அரசுக்கு பா.ஜ.க அரசுக்கு கண்டனம் பெட்ரோல், டீசல், சி.என்.ஜி விலை உயர்வு வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலையை உயர்த்தி வணிக பெருமக்கள்,பொதுமக்கள், அனைவரது தலைமையிலும் இடியை இறக்கி அனைத்துப் பொருட்களின் விலையும் உயர்ந்து உள்ளது.இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 16.05.2026 அறிவிக்கப்பட்டிருக்கும் பெட்ரோல், டீசல்,CNG விலை உயர்வால் சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாக உள்ளது.

மேலும் ஐந்து மாநில சட்டபேரவை தேர்தல் முடிந்ததும் பல்வேறு காரணங்களை காட்டி பொது மக்களை அதிகமாக பாதிக்கும் வகையில் டீசல்,பெட்ரோல் விலையை உயர்த்திய ஒன்றிய மோடி அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. பெட்ரோல், டீசல், சி.என்.ஜி விலையை உடனே குறைக்க வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# திரைப்படத் தயாரிப்பாளர் - நடிகர் கே.ராஜன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, மே.19-**

**திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான கே.ராஜன் அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :-**

திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான திரு.கே.ராஜன் அவர்கள் தற்கொலை செய்துகொண்டு உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைத்துறையின் முன்னேற்றத்திற்காகவும் சிறு தயாரிப்பாளர்களின் நலனுக்காகவும் எப்போதும் துணிச்சலுடன் குரல் கொடுத்து வந்தவர் ராஜன் அவர்கள்.

திரைப்பணியோடு கல்விப் பணியும் ஆற்றியவர். தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழிலேயே தலைப்பு வைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்.

தனிப்பட்ட முறையில் என்மீது மிகவும் அன்பு செலுத்திய ராஜன் அவர்கள், தனது பேச்சில் எப்போதும் திரைத்துறையின் அடித்தளத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனை முன்னிறுத்தியே பேசுவார்.

அன்னாரை இழந்து வாடும் கலைத்துறையினருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இந்தத் துயரத்தைத் தாங்கும் வலிமை கிடைக்கட்டும். அவர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விழுப்புரத்தில் மூடுவதாகக் கூறப்பட்ட

# டாஸ்மாக் கடைக்கு பெட்டி, பெட்டியாக வந்த மதுபாட்டில்கள்!

## பொதுமக்கள் அதிர்ச்சி!

விழுப்புரம், மே 19 -

விழுப்புரத்தில் தமிழ்நாடு அரசு மூடுவதாக அரசாணை வெளியிட்ட டாஸ்மாக் கடைக்கு லாரியில் மது பாட்டில்கள் பெட்டி, பெட்டியாக நேற்று கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசு கடந்த சில நாட்களுக்கு முன் தமிழ்நாடு முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் டாஸ்மாக் கடைகள் கணக்கெடுக்கப்பட்டு 717 டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது.

அதன்படி விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 11 கடைகள் மூடுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பட்டியலில் வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட மக்கள் புகார் கூறிய இடங்களில் உள்ள டாஸ்மாக் கடைகள் மூடவில்லை என்ற அதிருப்தியும் எழுந்தது.

இதுபோல், விழுப்புரம் நகரில் ரயில் நிலைய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள டாஸ்மாக் கடையால் தொடர்ந்து போக்குவரத்து நெரிசலும், அப்பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு வாசிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். தற்போது இந்த கடை மூடப்படுவதாக அரசாணை வெளியிட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த அறிவிப்பு வந்த மறுநாளே கடைகளில் மது வாங்குவதற்காக குடிமகன்களும் படையெடுத்தனர். கடையில் உள்ள சரக்கு தீரும் வரை கடை செயல்படும், அதன் பிறகு தான் மூடப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடையில் உள்ள சரக்கு அனைத்தும் காலியான நிலையில் நேற்று லாரியில் பெட்டி, பெட்டியாக பீர், பிராந்தி உள்ளிட்ட மது பாட்டில்கள் கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்த்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடையில் சரக்கு தீர்ந்ததும் சீல் வைப்பார்கள் என்று கூறிய நிலையில் மீண்டும் லாரியில் பெட்டி பெட்டியாக மதுபாட்டில் வந்து இறங்குவது உண்மையிலேயே தமிழ்நாடு அரசு கூறியபடி இந்த டாஸ்மாக் கடை மூடப்படுமா? அல்லது கண்துடைப்பா? என கேள்வி எழுப்பி உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வி. மோகனன்**

**மே 19 (2021)**



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.**

**புழல் ஒன்றியம், செட்டிமேடு கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**